<u>சார்பு நீதிமன்றம், திருவாரூர்</u>

| வழக்கு எண் | அ.வ.எண்.44/2020 |
|---|---|

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் திங்கட்கிழமை வா.சா.1 இன் வாக்குமூலம், 1872 ம் ஆண்டு இந்திய சாட்சி சட்டப்பிரிவு 44 விதிமுறைகளின் ஏற்பாட்டின் படி திரு. T. பாலமுருகன், B.A.,L.L.M., தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் (மு.கூ.பொ) சார்பு நீதிபதி, திருவாரூர் அவர்களால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சாட்சிய விசாரணை.

| | |
|---|---|
| பெயர் | சுப்ரமணியன் |
| த/பெயர் | சுந்தரம் |
| வயது | |
| மதம் | |
| கிராமம் | |
| வட்டம் | |
| மாவட்டம் | |
| தொழில் | |

வா.சா.1 சத்தியப்பிரமாணம் பெறப்பட்டு முதல்விசாரணை

இவ்வழக்கில் நான் வாதியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது பிரமாண வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 24.10.2013 தேதியிட்ட எனது சகோதரி எனது பெயரில் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் அசல் வா.சா.ஆ.1 ஆகும். 05.07.2000 தேதியிட்ட எனது சகோதரியின் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் அசல் வா.சா.ஆ.2 ஆகும். 26.12.2016 தேதியிட்ட எனது வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகும். 28.12.2018 தேதியிட்ட ஒப்புகை அட்டை நகல் வா.சா.ஆ.4 ஆகும். 23.01.2019 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிவ்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகும். 04.06.2019 தேதியிட்ட எனது வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆகும். 08.06.2019 தேதியிட்ட ஒப்புகை அட்டை நகல் வா.சா.ஆ.7 ஆகும். 03.07.2019 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.8 ஆகும். 09.09.2019 தேதியிட்ட நான் குடியிருந்து வரும் வாடகை வீட்டின் ரசீது அசல்

வா.சா.ஆ.9 ஆகும். 10.12.2018 தேதியிட்ட தாவா வீட்டிற்குண்டான குடிநீர் கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.10 ஆகும். 10.03.2019 தேதியிட்ட தாவா வீட்டிற்குண்டான வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.11 ஆகும். 20.06.2019 தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.12 ஆகும். 19.06.2017 தேதியிட்ட தாவா இடத்திற்கு நன்னிலம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய சிட்டா அசல் வா.சா.ஆ.13 ஆகும். 22.03.2021 தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்றம் சிஎம்எஸ்ஏ.எண்.3/2020 ன் வழங்கிய தீர்ப்பின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆகும். 14.06.2008 பிரதிவாதி இந்து திருமண விவாகரத்து மனு எண் 13/2008 ல் அழைப்பாணை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டையின் நகல் வா.சா.ஆ.15 ஆகும். 03.07.2015 தேதியிட்ட பிரதிவாதி எச்எம்ஓபி.எண்.13/2008 ல் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிரூபண அபிடவிட்டின் வாக்குமூலம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.16 ஆகும்.

(வா.சா.ஆ.9 முதல் 12 வரையிலான ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லை என்பதாலும் வழக்கு சொத்தின் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்பதாலும் பணம் செலுத்துபவரின் கையெழுத்தும் இல்லையென்பதாலும் அதனை குறியீடு செய்ய வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை செய்யப்பட்டது. அந்த மேற்படி ஆவணங்களில் செல்லும் தன்மை குறித்து சாட்சிகள் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யும் போது தான் தீர்மானிக்க முடியும் என்ற நிபந்தனையின் பேரில் குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது)

(பிரதிவாதியின் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வா.சா.ஆ.14 முதல் 16 வரையானவை வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்பதாலும் வாதி அவ்வழக்கில் ஒருதரப்பினர் அல்ல என்பதாலும் தனிநபரின் நடத்தை பற்றி கூறப்பட்டிருப்பதால் வாதி மூலம் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது வாதி தரப்பில் பிரதிவாதி குடியிருந்து வரும் முகவரியை நிரூபிப்பதற்காக மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ள காரணத்தினாலும் வழக்கிற்கு பிந்தைய ஆவணங்களிலும் செல்லும் தன்மை குறித்து இறுதி விசாரணையில் தீர்மானித்துக்கொள்ளாமல் என்ற அடிப்படையில் குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது).

ஒம். T. பாலமுருகன்,

சார்பு நீதிபதி, திருவாரூர்(மு.கூ.பொ)